BRAMPTON

Media Release

உடனடி வெளியீட்டுக்காக

# மூத்த குடிமக்களை கோவிட் -19 (COVID-19) தொற்றிலிருந்து காக்க அவர்களுக்கென தனி பணிப்படை

ப்ராம்ப்ட்டன், ON (மார்ச் 18, 2020) – இன்றைய தினம் ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் மூன்றாவதாக ஒரு பணிப்படையைஅறிவித்திருக்கிறது; இது மூத்த குடிமக்களை கோவிட் -18 (COVID-19) தொற்றிலிருந்து காக்கவும், உள்ளூர் பொருளாதாரத்திற்கும், தொற்றுக்கு ஆட்படக்கூடிய சமூகத்தினருக்கும் ஆதரவு அளிப்பதற்குமேயாகும்.

இந்தக் குழுவிற்கு வார்டு எண்கள் 7 மற்றும் 8 க்கான பிராந்திய கவுன்சிலராகிய பேட் ஃபோர்ட்டினி மற்றும் வார்டு எண்கள்  9 மற்றும் 10 க்கான பிராந்திய கவுன்சிலராகிய குருப்ரீத் தில்லான் ஆகிய இருவருமே தலைமை ஏற்பார்கள். இந்தச் சிறப்பு பணிப்படையானது, இந்த இக்கட்டான சமயத்தில் ப்ராம்ப்ட்டன் நகரின் மூத்த குடிமக்கள் தங்களுக்கான தகவல்கள் மற்றும் ஆதரவினை அவர்கள் பெறுவதில் ஒருங்கிணைப்பு  செய்யும்.

இந்த  குழுவானது ப்ராம்ப்ட்டன் நகர அவசரகால இயக்க செயல்பாடுகளுக்கான மையம் (City of Brampton Emergency Operations Centre)  மற்றும் நகரின் பணியாளர்களுடன் நெருங்கி பணியாற்றும்; இதன் மூலம் கோவிட்-19 (COVID-19) க்கு எதிராக பலன்தரத்தக்க விளைவுகளுக்காக ஒருங்கிணைய இயலும்.

இன்றைய அறிவிப்பானது நேற்று மேயர் அறிவித்த கோவிட்-19 (COVID-19) க்கு எதிரான பொருளாதார ஆதரவுக்கும், மீட்பு மற்றும் சமூக ஆதரவுக்குமான பணிப்படைகளைத் துவக்கியது பற்றிய அறிவிப்பினைத் தொடர்ந்து வருகிறது. இது பற்றி மேலும் அறிய இங்கு கிளிக் செய்யவும்

**எங்களைத் தொடர்பு கொள்ளும் வழிகள்**

நகரின் கோவிட்-19 (COVID-19 ) நிவாரண முயற்சிகளுக்கு தங்கள் பங்காற்றல் மற்றும் ஆதரவளித்து உதவ முன்வரும் தனி நபர்கள் வரவேற்கப்படுகிறார்கள்; தொடர்பு கொள்ள வேண்டிய மின்னஞ்சல் முகவரிகள்:

- கோவிட்-19 (COVID-19) தொற்றுக்கு எதிராக மேயர் வழங்கும் பொருளாதார ஆதரவு மற்றும் நிவாரணப் பணிப் படை - Covid19business@brampton.ca
- கோவிட்-19 (COVID-19) தொற்றுக்கு எதிராக மேயர் வழங்கும் சமூக ஆதரவு பணிப் படை - Covid19support@brampton.ca

- கோவிட்-19 (COVID-19) தொற்றுக்கு எதிராக மேயர் வழங்குகின்ற, மூத்த குடிமக்களுக்கு ஆதரவு அளிக்கும் பணிப் படை - Covid19seniors@brampton.ca

**மேலும் தகவல்களுக்கு**

நகரில் கிடைக்கும் சேவைகள், வசதியமைப்புக்கள் தங்கள் இடங்களில், நிகழ்ச்சிகளை நடத்தாமல் முடித்தல் பற்றிய மிக சமீபத்திய புதுத் தகவல்கள் மற்றும் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளுக்கு வருகை தரவும்: www.brampton.ca/covid19. பீல் பப்ளிக் ஹெல்த் (Peel Public Health) இல் இருந்து கிடைக்கின்ற தற்போதைய  தகவல்களுக்கு வருகை தரவும்: www.peelregion.ca/coronavirus.

**அறிஞர் கூற்று**

"ப்ராம்ப்ட்டன் நகர குடியிருப்புவாசிகள் மற்றும் பணியாளர்களைக் காப்பதற்காக நகரின் அரங்கம் மூடப்பட்டாலுமே கூட, உள்ளூர்ப் பொருளாதாரம் மற்றும் தொற்றுக்கு ஆட்படும் சமூதாயத்தினருக்கான ஆதரவு அளிப்பதில் நாங்கள் கூட்டாக செயல்படுவதற்காக, நகர மன்றமானது தொடர்ந்து செயல்படும். ப்ராம்ப்ட்டன் நகரின் மூத்த குடிமக்கள் தங்களுக்கு வேண்டிய மளிகை மற்றும் மருந்துப்பொருட்களை வாங்குவதில் அவர்களுக்கு உதவி புரிய நாங்கள் கவனம் எடுக்கிறோம் என்பதை இந்தப் புதிய பணிப்படை உறுதி செய்கிறது. ப்ராம்ப்ட்டன் நகரில் கோவிட்-19  (*COVID-19*) தொற்று உண்டாக்கக்கூடிய தாக்கத்தை குறைப்பதற்காக எங்களுடன் சேர்ந்து பணியாற்றுவோருடன் நாங்களும் கடமைப்பட்டிருக்கிறோம் ."

- *பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

***கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 650,000 மக்களையும் 70,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.*** *நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான  ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம்.* Twitter, Facebook, *மற்றும்* Instagram *ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள்.* www.brampton.ca *இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.*

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய  ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca